## மாணவ தாதியர் பயிற்சிக்கு இணைத்தளத்தின் ஊடாக விண்ணப்பிப்பதற்கான அறிவுறுத்தலல்கள்

விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய முன்னர் வர்த்தமானி அறிவித்தல் மற்றும் இணையத்தளம் ஊடாக விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வது தொடர்பான அறிவுறுத்தல்களை நன்றாக வாசிக்கவும்.

விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கும் போது விண்ணப்பதாரியிடம் இருக்கவேண்டிய ஆவணங்கள் மற்றும் விபரங்கள்

ஒவ்வொரு விண்ணப்பதாரரிடமும் பின்வரும் ஆவணங்கள் மற்றும் விபரங்கள் இருத்தல் வேண்டும்.

தேசிய அடையாள அட்டை இலக்கம்

உயரம் குறிப்பிடப்படல் வேண்டும் (செ.மீட்டரில்)

தொடர்பு கொள்ள வேண்டிய கையடக்க தொலைபேசி இலக்கம்

பணம் செலுத்திய பின்னர் வங்கியினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு

1. கையடக்க தொலைபேசி இலக்கமொன்றை குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பதாரி ஒருவருவர் தாய், தகப்பம் அல்லது நெருங்கிய ஒருவரின் தொலைபேசி இலக்கத்தை குறிப்பிட முடியும்.

2. பணம் செலுத்திய பின்னர் வங்கியினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதியொன்றை விண்ணப்பதாரி தம்வசம் வைத்திருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி ரூபா 500/= பணத்தை இலங்கை வங்கி, தெப்ர பிறேன், இலக்கம் **7041318** எனும் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் பரீட்சைக்கட்டணம் அறவிடல் எனும் கணக்கிற்கு செலுத்துதல் வேண்டும். இந்த கட்டணம் எந்தவொரு இலங்கை வங்கி கிளையிலும் செலுத்த முடியும் என்பதுடன், அவ்வாறு செலுத்திய பின்னர் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டில் அச்சிடப்பட்ட இலக்கம் (000/PF000000/00/000) விண்ணப்பத்தில் உரிய இடத்தில் சேர்க்கவும்.

விண்ணப்பம் சமர்ப்பிக்கும் படிமுறைகள்

இணையத்தளம் ஊடாக விண்ணப்பித்தல் ⟶ விண்ணப்பபம் பதிவேற்றம் (UPLOAD) செய்த பின்னர் கிடைக்கும் 5 இலக்கங்களைக் கொண்ட குறியீட்டை (நிரப்பிய விண்ணப்பத்தின் பிரதிகளை பின்னர் பெற்றுக்கொள்வதற்கு வசதிக்காக) பாதுகாப்பாக வைக்கவும்.

குறிப்பு : இணைய இணைப்பில் உள்ள குறுக்கீடுகள் காரணமாக அல்லது வேறு காரணத்தால் விண்ணப்பத்தை நிரப்பும் செயற்பாட்டை நிறைவு செய்ய முடியாது போகுமிடத்து, அதனை மீண்டும் புதிய விண்ணப்பமாக மீண்டும் நிரப்ப வேண்டும்.

1. பூர்த்தி செய்த விண்ணப்பத்தை இணையம் ஊடாக சமர்ப்பித்த பின்னர் அதன் அச்சுப் பிரதியொன்றை பெற்று தம்வசம் வைத்திருக்கவும்.

2. இந்த முறை சுகாதாரம் மற்றும் சுதேச வைத்தியச் சேவைகள் அமைச்சிற்கு விண்ணப்பத்தை தபாலில் அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை என்பதால் அவ்வாறு செய்வதை தவிர்க்கவும்.

இணையம் ஊடாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் போது கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கிய விடயங்கள்

1. நீங்கள் விண்ணப்பத்தை ஆங்கில மொழியில் மாத்திரமே நிரப்ப வேண்டும்.

2. இணையம் ஊடாக விண்ணப்பம் சமர்ப்பிக்கும் போது விண்ணப்பதாரி க.பொ.த (உ.தர) பரீட்சையில் பயன்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை இலக்கத்தையே பயன்படுத்த வேண்டும்.

3. உரிய பரீட்சை இலக்கத்தை உட்சேர்த்த பின்னர் க.பொ.த (உ.தர) பரீட்சை பெறுபேறுகள் கணினி மென்பொருள் ஊடாக தானாக உருவாகும். அந்த பெறுபேற்றில் ஏதாவது முரண்பாடுகள் இருப்பின் உரிய பாடம் மற்றும் தரம் என்பன அந்த இடத்தின் கீழே ஒதுக்கப்பட்டுள்ள கூண்டில் குறிப்பிடல் வேண்டும்.

4. விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும் போது உங்களுக்கு ஏதாவது சிக்கல்கள் எழுந்தால் அது தொடர்பாக வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் 4.00 வரையான காலத்தில் சுகாதாரம் மற்றும் சுதேச வைத்தியச் சேவைகள் அமைச்சின் மனித வள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவின் தொலைபேசி இலக்கம் **0112 693 955** எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அது தொடர்பான அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ள முடியும்.